### மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து சேவை - மாத சேமிப்பு ரூ.1000/-

# தினசரி 49 இலட்சம் பெண்கள் பயணம்!

## நிதிநிலை அறிக்கையில் ரூ.2,800 கோடி ஒதுக்கீடு!

சென்னை, ஜூலை 22-
தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்ட 5 திட்டங்களில் ஒன்றான, சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் மகளிருக்குக் கட்டணமில்லாப் பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டு இரு மாதங்கள் நிறைவு பெற்றுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் தேதி பொறுப்பேற்றது. தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் தலைமைச் செயலகம் வந்த முதலமைச்சர் அவர்கள் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாகவும், மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தும் விதமாகவும் ஐந்து உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

அதில் ஒன்றுதான் மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம் என்பதாகும். மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் செய்வதற்கான அரசாணையை தமிழ்நாடு அரசு 2021-ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதியன்றே வெளியிட்டது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்யலாம் என்று அந்த ஆணையில் கூறப்பட்டிருந்தது.

**மறுநாளே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம்**

மகளிருக்கு சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணத் திட்டம் மே 7ஆம் தேதி அறிவிக்கப்பட்டு, அன்றைய தினமே அரசாணை வெளியிடப்பட்டு மறுநாளே (மே 8) நடைமுறைக்கு வந்தது. இரவோடு இரவாக பேருந்துகளில் 'மகளிர் பயணம் செய்ய கட்டணமில்லை' என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு மிகவேகமாக பயன்பாட்டுக்கு வந்தது இந்தத் திட்டம்.

மகளிரின் ஏகோபித்த ஆதரவு, பலதரப்பட்ட விமர்சனங்கள், எதிர்ப்புகளுக்கு இடையே 2021-ம் ஆண்டு மே 8-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தால் இதுவரை பேருந்தில் மகளிர் மேற்கொண்ட பயணங்களின் எண்ணிக்கை 311.61 கோடி. இதற்கான கட்டணத் தொகை ரூ. 4,985.76 கோடி.

திருநர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்து பயண வசதி விரிவுபடுத்தப்பட்டதில் இதுவரை 18.04 இலட்சம் திருநர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதற்கான கட்டணத் தொகை ரூ. 288.64 இலட்சமாகும்.

ஏழை, எளிய பெண்களுக்கு இந்த திட்டம் பேருதவியாக அமைந்தது. வேலைக்குச் செல்லும் மகளிரால் கொண்டாடப்படும் திட்டமாக இது அமைந்துள்ளது.

**75% பேருந்துகள் இயக்கம்**

மாநிலத்தில் மொத்தம் இயக்கப்படும் 9,620 நகரப் பேருந்துகளில் 74.46 சதவீதப் பேருந்துகள் மகளிருக்கான கட்டணமில்லா பயணத்திற்காக இயக்கப்படுகின்றன.

2023-24-ம் நிதி ஆண்டில் ஒரு நாளைக்கு சுமார் 49.06 இலட்சம் மகளிர் பேருந்தில் பயணிக்கின்றனர். மொத்தம் பயணிக்கும் பயணிகளில் மகளிர் பங்கு 66.03% ஆகும். மூன்றாம் பாலினத்தவர்கள் சுமார் 3,013 பேர் நகர பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

**திட்டக்குழு ஆய்வு**

மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் எம்.விஜயபாஸ்கர், கொள்கை ஆலோசகர்களுடன் இணைந்து, அரசுக்குச் சொந்தமான பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களில் பெண்களுக்கான கட்டணமில்லாப் பயணத்தால் அடையும் பயன்கள் குறித்த ஆய்வை மேற்கொண்டார். வெவ்வேறு தொழில் பிரிவுகளை சார்ந்த பெண் பயணிகளிடம் நடத்தப்பட்ட அந்த ஆய்வில், மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம், ஒரு மாதத்திற்கு ரூ.756/- முதல் ரூ.1,012/- வரை அவர்கள் சேமிப்பது தெரியவந்துள்ளது. சராசரியாக மகளிர் சேமிக்கும் தொகை மாதம் ரூ. 888/- என கணக்கிடப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம், மதுரை மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களை ஆய்வுக் குழுவினர் தேர்வு செய்து ஆய்வு நடத்தி தரவுகளைச் சேகரித்தனர். விவசாயப் பகுதியில் உள்ள பெண்களின் பயணம் பற்றி தெரிந்துகொள்ள நாகப்பட்டினமும், தொழில் நகரங்களில் பெண்கள் எப்படிப் பயணம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க திருப்பூரும் தேர்வு செய்யப்பட்டது. வர்த்தக மையமாகவும், சுற்றுலாத் தலமாகவும் விளங்கும் மதுரையில் வசிக்கும் பெண்களின் பயணம் பற்றி தெரிந்து கொள்ள மதுரை தேர்வு செய்யப்பட்டதாகத் திட்டக் குழு தெரிவித்தது.

பெண்களின் கட்டணமில்லா பயணத்தையும் ஒழுங்குபடுத்தி, அதன் தரவுகளை வைத்திருக்க விரும்பிய தமிழ்நாடு அரசு, தனியாக மகளிருக்கு இலவச பயணம் என்று குறிப்பிட்டு டிக்கெட்டுகளையும் அச்சடித்து வழங்கி வருகிறது..

**ரூ. 2,800 கோடி ஒதுக்கீடு**

மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத்திற்காக அரசு 2023-24-ம் நிதி ஆண்டில் ரூ. 2,800 கோடியை நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்துள்ளது. திருநர்களின் பயணத்திற்கு அரசு ரூ. 1.21கோடியை ஒதுக்கியுள்ளது.

**பயனாளிகள் யார்?**

கல்லூரி மாணவிகள், படிக்க நினைக்கும் மகளிர், சமூக அறிவைப் பெற நினைக்கும் பெண்களுக்கு, வீட்டில் இருந்தபடியே சிறுகுறு தொழில் செய்யும் இல்லத்தரசிகளுக்கு இது மிகவும் பயனுள்ள திட்டமாகும்.

ஆயிரம், இரண்டாயிரம் சம்பளத்துக்கு அரை மணி நேரம் பயணம் செய்து வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கு பயனுள்ள திட்டமாகும்.

துணிக்கடைகளில், சிறு நிறுவனங்களில், தூய்மைப் பணியாளர்களாக, கட்டட வேலையில் சித்தாளாகப் பணிபுரியும் குறைந்த ஊதியம் வாங்கும் பெண்களும் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

குழந்தைகளை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் தாய்மார்களுக்கும், குழந்தைகளை நாள்தோறும் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் பெண்களுக்கும், வீட்டில் கணவரின் வருமானம் போதாத சூழலில் வேலைக்குச் செல்ல தயாராகும் பெண்களுக்கும் இந்த திட்டம் பயனுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஒரு நாட்டின் வளர்ச்சி, ஒரு மாநிலத்தின் வளர்ச்சி என்பது பெண்களின் வளர்ச்சியையும் கொண்டே கணக்கிடப்படுகிறது. பெண்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்படும் வரிசையில் இது முக்கியமான முன்னோடித் திட்டமாகும்.

நகர்ப்புற பயனர்களை விட கிராமப்புற குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்தத் திட்டத்தால் அதிகப் பயனடைகிறார்கள் என்பதும் திட்டக்குழு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. மேலும், மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டத்தின் பயனர்களில், 39 சதவீதம் பேர் பட்டியல் இனப் பெண்கள். 21 சதவீதம் பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள். 18 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் எனவும் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. பெண் பயணிகளில் கிட்டத்தட்ட 50 சதவீதம் பேர் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பெண்கள், தங்கள் பயணத் தேவைகளுக்காக குடும்ப உறுப்பினர்களைச் சார்ந்திருப்பது குறைந்திருப்பதாகவும், கவுரவமாக நடத்தப்படுவது, அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு இந்த திட்டம் பங்களிப்பதாகவும் கூறியுள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் சேமிக்கப்படும் தொகை, கூடுதல் வீட்டுச் செலவுகளுக்குப் பயன்படுவதாக பெரும்பாலான பெண்கள் கூறியுள்ளனர்.

**சென்னையில்...**

முன்னதாக, இக்குழுவினர் சென்னை மாநகரத்தில் ஆய்வு மேற்கொண்டனர். அதில், இத்திட்டத்தின் கீழ் பெண் பயணிகள் மாதத்திற்கு சுமார் 50 பயணங்களை மேற்கொள்வதாகவும், இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.858 வரை அவர்கள் சேமிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இந்த ஆய்வுக்காக, கோயம்பேடு - திருவொற்றியூர், தாம்பரம் - செங்கல்பட்டு மற்றும் பிராட்வே - கண்ணகிநகர் ஆகிய மூன்று வழித்தடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

மகளிர் நலன், மகளிர் மேம்பாட்டுக்கென தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களில் மகளிருக்கு சுய அதிகாரமளிக்க வகை செய்வதாக கட்டணமில்லா பேருந்து சேவை அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.






ஈரோடு குமலன்குட்டை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு நாள் குறித்து விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்த வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை சார்பில் தமிழ்நாடு நாள் குறித்த சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை துவக்கி வைத்து பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, மகளிர் திட்ட இயக்குனர் மைக்கேல், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் கஸ்தூரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் குழந்தைராஜன், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சியாமளா நவநீதகிருஷ்ணன் தலைமை! இரா.நவநீதகிருஷ்ணன் முன்னிலை!

# பொள்ளாச்சி நகர தி.மு.க. சார்பில் தெருமுனைக் கூட்டம்!

### அமைச்சர் சு.முத்துசாமி - சேலம் சுஜாதா - தளபதி முருகேசன் சிறப்புரை!

கோவை, ஜூலை 22-
முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனை பிரச்சாரக் கூட்டம் கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர தி.மு.க. சார்பில் இன்று (22.7.2023 - சனிக்கிழமை) கூட்டம் நடைபெறும் இடங்கள் புதிய பேருந்து நிலையம்,மீனாட்சி மண்டபம், ரவுண்டானா. பூ மார்க்கெட், குமரன் நகர் போன்ற இடங்களில் நடைபெறுகின்றது.

தலைமை நகர மன்ற தலைவர் சியாமளா நவநீத கிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

நகர கழக செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன், நகரக் கழக துணை செயலாளர் ஆர்.நாச்சிமுத்து,ஏ.பாத்திமா அக்பர், ஸ்வீட் நாகராஜ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

உமா மகேஸ்வரி, இந்திரா கிரி, போர்வெல் துரை, சுதா, கலைவாணி, ஜோதிமணி, பழனிச்சாமி, மணிமாலா, கவிதா, கந்தமனோகர், கீதா லட்சுமி, டேஸ்டிபாலு இளமாறன், மாணிக்கராஜ், லோகநாயகி, தங்கவேல், பாலகிருஷ்ணவேணி, விஜயா காயத்ரி, சரிதா, பெருமாள், சண்முகப்பிரியா, செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், சு.முத்துசாமி, சேலம் சுஜாதா, தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மு.கண்ணப்பன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சண்முக சுந்தரம், இணைச் செயலாளர் மாநில தொழில் நுட்ப அணி டாக்டர் மகேந்திரன், இரா.தமிழ்மணி, கே.எம்.நாகராஜ், ஜி.ஏ.அதிபதி, தென்றல் செல்வராஜ், மருத்துவர் கி.வரதராஜ், திம்மம்பட்டி ஆறுச்சாமி, சித்திக், பணப்பட்டி தினகரன், சந்திரசேகர், சண்முகம், மு.க.முத்து, தணிக்கை ராஜேந்திரன், அமுதபாரதி, ஜெயக்குமார், ஆட்சிப்பட்டி பாலு, கே.வி.சுப்பிரமணியம், சாமிநாதன், பொன்னுசாமி, கனிமொழி, ஜெயப்பிரகாஷ், கிரி கதிர்வேல்,செ.ஆ.துரை, வே.மருதுவேல், ராஜூ, ரமேஷ், அழகப்பன், தர்மராஜ், ஆகிமூர்த்தி, இரும்பு சுப்பிரமணியம், வடிவேல், சாதிக்அலி, மருதராஜ், கிரி, கனகராஜ், கே.வி.கே.எஸ்சபரிகார்த்திகேயன், சாந்தி தேவி தர்மராஜ், ச சிராஜூதீன், சிபி. செந்தில், குட்டப்பன், ஆறுமுகம், கோ.சி. மணிகண்டன், பிரபாகரன், இரா.தனம் தங்கதுரை, மணிமாறன் தென்றல், திருமலை ராஜா, சதீஷ் குமார், சிவானந்தம், பாலசுப்ரமணியம், சரவணன், தர்மலிங்கம், அழகு கணேஷ்குமார், அருண் கார்த்திக், மாரிமுத்து, வெங்கிடுசாமி, கண்ணன், மணிகண்டன், விஜயகுமார், ராமச்சந்திரன், பூவை செல்வராஜ், பஜ்லுரள்ஹக், ஜெகதீசன், ஜெயலாதீன், மணிகண்டன், தர்மலிங்கம், சரண்யா, போஜ ராஜன், பிரேம்நாசீர், ஆலயமணி, கணேசன், ஜெயச்சந்திரன், சதீஷ் குமார், ஜெயலாப்தீன், நாகேந்திரன், ஆட்டோ அமீது, சண்முகம், கருப்பையா, ஆறுமுகம், ரமேஷ் குமார், செந்தில்ராஜ், ஞானவேல் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர். எஸ்.கௌதமன் நன்றி கூறுகிறார்.

# எதிர்க்கட்சிகள் ஒற்றுமையால் - நிச்சயம் புதிய 'இந்தியா' பிறக்கும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 22-
எதிர்க்கட்சிகள் ஒருபோதும் ஒன்றிணைய முடியாது என்று பிரதமர் மோடியின் கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளது பா.ஜ.க.வுக்கு மிகப்பெரிய பின்னடைவு. எதிர்க்கட்சிகளின் இந்த ஒற்றுமையால் நிச்சயம் புதிய இந்தியா பிறக்கும் என 'தினகரன்' நாளேடு 20.7.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

2024-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதாவை வீழ்த்தும் நோக்கில், காங்கிரஸ் கட்சி ஏற்பாடு செய்திருந்த எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் பெங்களூருவில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.



தினகரன்
புதிய இந்தியா
2024

இந்தக் கூட்டத்தின் முக்கிய அம்சமாக, தேசிய அளவில் காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியை இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி 'இந்தியா' (INDIA) என்று அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 26 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து தற்போது அறிவித்துள்ள கூட்டணியின் பெயரை (இந்தியா) போன்று, கடந்த காலங்களில் மக்களவைத் தேர்தலுக்கு முன் கூட்டணியின் பெயர் முன்னெடுக்கப்பட்டதில்லை.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 26 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து எடுத்துள்ள இந்த முடிவையும், அக்கட்சிகள் அனைத்தும் மீண்டும் ஒன்றுகூடி முக்கிய ஆலோசனைகள் மேற்கொண்டுள்ளதையும் பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிரான உறுதியான நடவடிக்கையாகவே அரசியல் ஆலோசகர்கள் கருதுகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் இந்த செயல்பாடு நல்ல தொடக்கமாக இருந்தாலும், பா.ஜ.க.வை வீழ்த்த அவை இன்னும் நிறைய தூரம் செல்ல வேண்டியுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. அதற்கான பணிகளை தீவிரமாக செய்யவும் தொடங்கியுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டம் மும்பையில் நடைபெற உள்ளது. அங்கு அடுத்த கட்ட பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளன. தொகுதி பங்கீடு உள்ளிட்டவற்றில் தங்களுக்குள் நிலவும் சிக்கல்களுக்கு 2024 மக்களவைத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பாவது எதிர்க்கட்சிகள் தீர்வு காண வேண்டியது நல்லது. பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். தங்களது பிரசாரங்களில் பாரத் என்ற வார்த்தையை தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றன. இந்த நிலையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு 'இந்தியா' என்று பெயரிட்டுள்ளதன் மூலம், பாரத்துக்கும், இந்தியாவுக்கும் இடையேயான வேறுபாட்டை மிகவும் சாதுரியமாக ராகுல்காந்தி நீக்கி உள்ளார்.

பாட்னாவில் கடந்த மாதம் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் 16 கட்சிகளே பங்கேற்றிருந்த நிலையில், பெங்களூருவில் நடைபெற்று முடிந்துள்ள கூட்டத்தில் 26 கட்சிகள் பங்கேற்றுள்ளது அவர்களின் ஒற்றுமைக்கு நல்ல சான்று. இது காங்கிரஸ், திரிணாமுல், ஆம் ஆத்மி உள்ளிட்ட சில கட்சிகளிடையே நிலவிய கருத்து வேறுபாட்டையும் நீக்கியுள்ளது. அவர்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் ஆட்சி, அதிகாரத்தைக் கைப்பற்றுவது காங்கிரஸின் இலக்கு அல்ல. அரசியலமைப்புச்சட்டத்தையும், சமூக நீதியையும் பாதுகாப்பதே அதன் நோக்கம் என்று அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு வாக்கில் பிரதமர் மோடிக்கு இருந்த செல்வாக்கு தற்போது இல்லை. ஊழலை கடுமையாக எதிர்ப்பதாக கூறிக்கொள்ளும் பிரதமர் தலைமையில் டெல்லியில் நடந்த 38 இயக்கங்களின் கூட்டத்தில் பங்கேற்ற பல தலைவர்கள் மீது ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளது சாதுர்யமாக மறக்கப்பட்டுள்ளது. இதை எதிர்க்கட்சிகள் தங்கள் பிரசாரத்தில் நிச்சயம் முன்னெடுக்கும். தனக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒருபோதும் ஒன்றிணைய முடியாது என்று பிரதமர் மோடி எப்போதும் கூறி வருகிறார். ஆனால் அவரது இக்கூற்றை பொய்யாக்கும் விதத்தில், எதிர்க்கட்சிகள் தற்போது ஒருங்கிணைந்துள்ளன.

இதுவே பா.ஜ.க. அரசுக்கு மிகப்பெரிய பின்னடைவு. எதிர்க்கட்சிகளின் இந்த ஒற்றுமையால் நிச்சயம் புதிய இந்தியா பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்! மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர் ஜூலை 22 -
தஞ்சை வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் க. நஷீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு வரவேற்புரையாற்றினார்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் செ.இராமலிங்கம், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்ட தீர்மானத்தை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் ஜெயலெட்சுமி நடராஜன், சாஸ்தா நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 ல் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தின் தீர்மானம்படி வாக்குச்சாவடியில் உள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரி பார்க்கப்பட்டு டெல்டா மண்டலத்திற்குட்பட்ட தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் BLA2 பயிற்சி பாசறை கூட்டம் வருகிற 26.07.2023 புதன்கிழமை அன்று திருச்சி ராம்ஜி நகர் கருமண்டபத்தில் கழக தலைவர் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிட உள்ளார்.

ஆகையால் நமது தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட BLA2 வாக்குசாவடி பொறுப்பாளர்கள் அனைவரையும் பயிற்சிப் பாசறைக் கூட்டத்திற்கு வாகனங்களில் அழைத்துச் சென்று தவறாது பங்கேற்கச் செய்வது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

மாநகர ஒன்றிய, பேரூர்க் கழக செயலாளர்கள் தலைமைக் கழகத்தால் கோரப்பட்டுள்ள புகைப்படத்துடன் கூடிய கிளைக் கழக நிர்வாகிகள் பட்டியல் Excel Formatல் Uniocode Fontல் தயார் நிலையில் வைத்திருப்பீர்கள். அப்பட்டியலை உடனடியாக மாவட்ட கழகத்தில் ஒப்படைப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

மாநகர ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் உடனடியாக பகுதி வாரியாகவும், ஒன்றிய அளவிலும் பேரூர் கழகத்திலும் அனைத்து சார்பு அணிகளுக்கான பொறுப்பாளர்களை தேர்வு செய்யும்போது தாய் கழக நிர்வாகிகள் பொறுப்பிற்கு விண்ணப்பித்து வாய்ப்பு கிடைக்காதவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அணிகளுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பட்டியலை உடனடியாக மாவட்ட கழகத்திடம் வழங்க வேண்டுமாய் தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்கள் நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த ஒரு கோடி உறுப்பினர் சேர்க்க உடன் பிறப்புகளாய் இணைவோம் என்று மாபெரும் முன்னெடுப்பின் படி ஏற்கனவே, பூர்த்தி செய்து வழங்கப்பட்ட உறுப்பினர்கள் படிவம் தவிர மீதி உள்ள உறுப்பினர் படிவங்களை உடனடியாக சேர்த்து மாவட்ட கழகத்திடம் வழங்க வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

வருகிற இந்திய 2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தம் 21.07.2023 முதல் 21.08.2023 வரை சரி பார்க்கப்படும் பணி நடைபெறுகிறது.

வாக்காளர் அட்டையில் தரமற்ற புகைப்படங்களை தரமாக மாற்ற மற்றும் வாக்குச்சாவடி எல்லை மறு சீரமைப்பு 22.08.2023 முதல் 22.09.2023 வரை நடைபெற உள்ளது. ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 17.10.2023 இல் வெளியிடப்படுகிறது.

இறுதி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் சேர்ப்பு நீக்குதல் மற்றும் திருத்தம் செய்ய விண்ணப்பிக்கும் முகாம் 17.10.2023 முதல் 30.11.2023 வரை நடைபெற உள்ளதால் மாநகர, பகுதி கழக, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் வாக்காளர் சேர்ப்பு முகாமை பயன்படுத்தி புதிய வாக்காளர்களை சேர்த்தும் இறந்தவர்களை நீக்கம் செய்ய பயன்படுத்தி கொள்ள மாவட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் அவர்களின் சகோதரர் க. உண்மை மறைவிற்கும், பாபநாசம் ஒன்றியம், ஆதனூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் கழக மூத்த முன்னோடி முருகேச உடையார் அவர்கள் மறைவிற்கும், திருவிடைமருதூர் பேரூர் செயலாளர் சுந்தர.ஜெயபால் தாயார் அம்சவள்ளி அம்மாள் ஆகியோர் மறைவிற்கு தஞ்சை வடக்கு மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன்தினம் (20.07.2023) அனைத்து மாவட்ட துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்கள் உடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் மாவட்ட வாரியாக பால் உற்பத்தி மற்றும் பால் கொள்முதலை அதிகரிக்கவும், பால் மற்றும் பால் உப பொருட்களின் விற்பனையை அதிகரித்தல், அனைத்து ஒன்றியங்கள் மற்றும் இணையத்திலுள்ள பணியாளர்களின் பணித்திறன் மேம்பாடு, முந்தைய ஆய்வுக்கூட்டங்களில் வழங்கிய உத்தரவுகள் மீதான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து மேலும் மேம்படுத்த அறிவுரை வழங்கினார். பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. வினீத், உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி ராஜேந்திரபுரத்தில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழா வரலாற்று தலைவர் வான்புகழ் கலைஞர் என்ற தலைப்பில் கவியரங்கத்தில் திரைப்பட பாடல் ஆசிரியர் கவிஞர் விவேகா தலைமையில் நடைபெற்றது. இதில் கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி, கவிஞர் ரவிபாரதி, கவிஞர் தஞ்சை இனியன், கவிஞர் இளையகம்பன் ஆகியோர் கவிபாடினார்கள். தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.